செய்தி வெளியீடு எண்:007 நாள்: 06.01.2020

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (6.1.2020) தலைமைச் செயலகத்தில், வனத்துறையில் காலியாகவுள்ள 564 வனக்காவலர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

காடுகளின் பராமரிப்பும், பெருக்கமும் மனித இனத்திற்கு மட்டுமின்றி அனைத்து உயிர்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு, மாநிலத்தின் வன உயிரின பாதுகாப்பிற்கும், வன வளர்ச்சிப் பணிகளுக்கும், உறுதுணையாக உள்ள வனத்துறையினரின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. வனத்துறையில் காலியாகவுள்ள பணியிடங்கள் தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் வாயிலாக நிரப்பப்படுகிறது. 2018–ஆம் ஆண்டில் 300 வனவர்கள், 726 வனக்காப்பாளர்கள் மற்றும் 61 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும், இவ்வாண்டு 227 வனக்காப்பாளர் மற்றும் 93 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களை நிரப்பிட தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், வனத்துறையில் காலியாகவுள்ள வனக்காவலர்கள் பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தின் மூலமாக 7.3.2019 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, எழுத்துத் தேர்வு, உடற்தகுதித் தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு பிறகு, 381 ஆண்கள் மற்றும் 183 பெண்கள், என மொத்தம் 564 நபர்கள் வனக்காவலர்கள் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். வனக்காவலர்கள் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 564 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். தெரிவு செய்யப்பட்ட 564 நபர்களுள், மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைமாவட்டங்களில் வாழும் பழங்குடி இனத்தைச் சார்ந்த 66 ஆண்களும், 33 பெண்களும் அடங்குவர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்) முனைவர் பெ.துரைராசு,இ.வ.ப., தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தின் தலைவர் மற்றும் கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு. விஜேந்திர சிங் மாலிக், இ.வ.ப., கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) திரு. ராகேஷ் குமார் டோக்ரா, இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**